## பலன் பெருக்கும் பழக்கரைசல்...!

## 10.10.2012

 

ரசாயன விவசாயம் செய்யும் விவசாயிகள், கடைகளில் கிடைக்கும் தயார் நிலையில் உள்ள இடுபொருட்களை மட்டும்தான் பயிர்களுக்கு கொடுப்பார்கள். ஆனால், இயற்கை வழி விவசாயம் செய்பவர்கள் அதிக தேடலில் ஈடுபட்டு, பண்ணையில் கிடைக்கும் பொருட்களை வைத்தே புதிது, புதிதாக இடுபொருட்களைத் தயாரித்து செலவைக் குறைப்பதோடு, லாபகரமான மகசூலையும் எடுத்து வருகிறார்கள்! அப்படிப்பட்ட விவசாயிகளில் ஒருவரான கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன் புதூர் கிராமத்தைச் சேர்ந்தவர் செல்வக்குமார். நாகர்கோவில் – திருநெல்வேலி சாலையில் மூன்றாவது கிலோ மீட்டரில் உள்ள வெள்ளமடம் என்ற ஊரிலிருந்து கிழக்கு திசையில் ஏழாவது கிலோ மீட்டரில் இருக்கிறது செண்பகராமன் புதூர். விளை நிலங்களை, செங்கல் சூளைகள் விழுங்கி வரும் இப்பகுதியில், இயற்கை விவசாயம் செய்து வருகிறார் செல்வக்குமார்.

**பழக்கரைசல் மட்டுமே போதும்!**

எங்க சுத்துவட்டாரத்திலேயே ரசாயனம் இல்லாமல் இயற்கை விவசாயம் செய்வது நான் மட்டும் தான். ஒரு முறை எங்க பகுதியில் பெய்த கனமழைக்கு ரசாயன வயலில் இருந்த நெல் பயிர் எதுவுமே தாக்கு பிடிக்கவில்லை. ஆனால், இயற்கையில் விளைந்த என்னோட நெல் பயிர், விடாத மழையிலும் போராடி ஜெயித்துவிட்டது என்றார். இரண்டு ஏக்கரில் விவசாயம் செய்கிறேன். அரை ஏக்கரில் நாட்டுச் சம்பா, ஒரு ஏக்கரில் நிலக்கடலை, அரை ஏக்கரில் ஏத்தன் வாழை அதற்கு ஊடுபயிராக ரோஜா என்று முழுக்க முழுக்க இயற்கை முறையில் விவசாயம் செய்கிறேன். மொத்தமாக இரண்டு ஏக்கருக்கும் சேர்த்து 4 டன் தொழுவுரத்தை அடியுரமாக போடுவேன். 50 கிலோ மண்புழு உரத்தைப் போடுவேன். மற்றபடி

நிலக்கடலை, ரோஜா, வாழை.. என்று எதற்குமே எந்த இடுபொருட்களையும் போடுவதில்லை. வெறும் பழக்கரைசலை மட்டும்தான் தெளிக்கிறேன்.

**பழக்கரைசலுக்கு பப்பாளியும் பனம்பழமும்!**

நான்கு வருடமாக பழக்கரைசலை பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். 5 அடி நீளம், 5 அடி ஆழம், 4 அடி அகலத்தில் ஒரு மண்புழு உரம் தயாரிக்கும் தொட்டி இருந்தது. இப்போது மண்புழு உரத்தையல்லாம் கைவிட்டாச்சு. ஆனால், பழக்கரைசலுக்கு அந்தத் தொட்டிதான் இப்போது கைக்கொடுக்கிறது.
தோட்டத்தில் அங்கங்கே பப்பாளி மரங்களும், பனை மரங்களும் நிற்கிறது. கீழே விழும் பப்பாளிப் பழங்களை வைத்துதான் ஆரம்பத்தில் பழக்கரைசல் தயாரித்து பயன்படுத்திக் கொண்டிருந்தேன். இப்போது, பனம் பழங்களையும் பயன்படுத்துகிறேன். இந்தப் பழக்கரைசலைப் பயன்படுத்த ஆரம்பித்த பிறகு... பூச்சி,நோய் தாக்குதல் சுத்தமாக இல்லை. பூச்சி, நோய் தாக்குதல் இல்லையென்றாலே... மகசூல் கூடத்தானே செய்யும் என்றார்.

**6 மாதங்கள் வரை வைத்திருக்கலாம்!**

15 லிட்டர் கொள்ளவு கொண்ட கேனில், 10 பப்பாளி பழங்களை போட்டு இறுக்கமாக மூடி வைக்க வேண்டும். இரண்டு நாளில் அது நன்றாக அழுகி நுண்ணுயிரிகள் பெருகிவிடும். மூன்றாம் நாள் காலையில் கேனைத் திறந்து அதில் ஒரு குடம் மாட்டுச் சிறுநீரை விட்டு மூடி வைக்க வேண்டும். அதே நாள் மாலையில் கேனைத் திறந்து கையளவு வேப்பிலையைப் போட்டு மூடி வைக்க வேண்டும். இவையெல்லாம் ஒன்றாக சேர்ந்து நன்றாக அழுகிவிடும். மூன்று நாளைக்கு ஒரு முறை இதை நன்றாகக் கலக்கி வந்தால், 30-ம் நாளில் பப்பாளிப் பழக்கரைசல் தயாராகிவிடும். 100 லிட்டர் தண்ணீர், ஒரு லிட்டர் வேப்பெண்ணெய், ஒரு லிட்டர் பப்பாளிப் பழக் கரைசல் என்ற விகிதத்தில் கலந்து தெளிப்பான் மூலமாகத் தெளிக்கலாம். இது ஒரு ஏக்கருக்கு போதுமான அளவு. இதை தயாரித்து ஆறு மாதங்கள் வரை வைத்திருந்துப் பயன்படுத்தலாம்.

பப்பாளிக் கரைசலைவிட, பனம்பழக் கரைசல் அடர்த்தி அதிகமாக இருக்கும் என்பதால், இதனுடன் அதிகளவு தண்ணீர் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒன்றரை லிட்டர் பனம்பழக் கரைசல் தேவைப்படும். கேன் அல்லது தொட்டியில் 10 பணம் பழங்களைப் போட்டு, அதனுடன் 5 லிட்டர் தண்ணீர் சேர்த்து, தொட்டியின் மேல் பகுதியை பனை ஓலையால் மூடி விட வேண்டும். 4 – ம் நாளில் அது நன்கு ஊறி அழுக ஆரம்பிக்கும். 5 – ம் நாள் இரண்டு குடம் மாட்டுச் சிறுநீரை இந்தக் கலவையில் ஊற்றி கலக்கி விடவேண்டும். 7-ம் நாளிலிருந்து மூன்று நாட்களுக்கு ஒரு முறை இந்தக் கலவையை நன்றாகக் கலக்கி வர வேண்டும். 21 –ம் நாளில் நுண்ணுயிரிகள் அதிகளவில் உருவாகி நுரைக்க ஆரம்பித்து விடும். அதற்கு மேல் இதைப் பயன்படுத்தலாம். 150 லிட்டர் தண்ணீர், ஒரு லிட்டர் வேப்பெண்ணெய், ஒரு லிட்டர் பனம்பழக் கரைசல் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கலாம். இதை 6 மாதங்களுக்கு மேலும் வைத்திருந்து பயன்படுத்தலாம். இக்கரைசலில் நாட்கள் கூடக்கூட வீரியம் திகரிக்கிறது.

**செலவில்லாத வேளாண்மை!**

தயாரிப்பு முறைகளைச் சொன்ன செல்வக்குமார் நிறைவாக, “நெல்லுக்கு 40-ம் நாள் ஒரு முறையும், கதிர் பூட்டு வருவதற்கு 10 நாளைக்கு முன்பும் பழக்கரைசலைக் கொடுக்க வேண்டும். நிலக்கடலைக்கு 60-ம் நாள் மட்டும் கொடுத்தால் போதும். ரோஜாவிற்கு 20 நாளைக்கு ஒரு முறை கொடுக்க வேண்டும். வாழைக்கு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தெளிக்க வேண்டும். இதைத் தவிர வேறு எதுவும் தேவை இல்லை.

பனம்பழக் கரைசலில் இயற்கையாகவே நைட்ரஜன் சத்து அதிகமாக இருப்பதால், நல்ல விளைச்சல் கிடைக்கிறது. அதோடு, பயிர்களுக்கு நோய் எதிர்ப்புத் திறனும் அதிகரிக்கிறது. எனக்கு எல்லா பயிர்களிலும் இதனால் அதிக மகசூல் கிடைத்து கொண்டிருக்கிறது. இது என்னோட அனுபவத்தில் பார்த்த விஷயம் என்றார்.

**தொடர்புக்கு**
**செல்வக்குமார், செல்போன் : 94864 – 72459.**